**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 367/2016**

Deposition of the witness for Prosecution **PW** 3
Name : செல்வி
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (02.02.2026)

A1 to A6 present

முதல் விசாரணை

நான் தற்போது தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்குமுன்பு நான் குற்றாலம் காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது என்னுடன் பணியாற்றிய தலைமை காவலர் மாரியப்பன் மற்றும் உதவி ஆய்வாளர் பாண்டித்துரை ஆகியோர்கள் தற்போது பணிமாறுதலாகி சென்றுவிட்டார்கள். அவர்கள் பதிவு செய்து வைத்திருந்த ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 08.05.2016 ஆம் தேதி 19.00 மணிக்கு தலைமை காவலர் மாரியப்பன் என்பவர் நிலைய பொறுப்பிலிருந்தபோது தென்காசி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு சிகிச்சையில் இருந்த ஆரோக்கிய ஜெபமணி என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று நிலையம் வந்து அதன்தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.116/2016, சட்டப்பிரிவுகள் 147, 294(பி),323,506(1) இதச and sec 4 of TNPHW Act இன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** ஆகும். பின்னர் வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் பாண்டித்துரை அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 09.05.2016 ஆம் தேதி 21.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மல்லிகா, வேலுமயில் ஆகியோர்

முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.**3,** மாதிரி வரைபடம் அ.சா.ஆ.**4** ஆகும்.

பின்னர் பட்டியல் சாட்சிகள் ஆரோக்கிய ஜெயமணி, சாலமோன், விஜயகுமார், மல்லிகா, வேலுமயில், மற்றும் தலைமை காவலர் மாரியப்பன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 1, 3, 6 எதிரிகளை 10.05.2016 தேதி காலை 07.30 மணிக்கு முத்துமாலைபுரம் பஸ் ஸ்டாப் பக்கம் வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். காயம்பட்ட ஆரோக்கிய ஜெயமணி என்பவருக்கு சிகிச்சை அளித்த தென்காசி அரசு மருத்துவர் முகமது இஸ்மாயில் என்பவரை விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றுள்ளார். அந்த காயச்சான்று **அ.சா.ஆ.5** ஆகும். அத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். சொன்ன மாதிரி, சொன்ன நாள், சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நடக்காத சம்பவத்திற்கு பின்யோசனையுடன் தயாரிக்கப்பட்ட ஆவணங்களுக்காக வேண்டி ஒருதலைபட்சமாக விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்துள்ள பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவை காவல் நிலையத்தில் வைத்து பின் யோசனையுடன் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் ஒருதலைபட்சமாக விசாரித்து பிழையான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. இதே சம்பவத்தில் எதிரிகள் கொடுத்த புகார் மனுவின்படி அ.சா.2 மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு சமூகம்

மன்றத்திலிருந்து அந்த வழக்கு முடிந்துவிட்டது என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் அதை பற்றி சொல்லமுடியும்.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct. S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.02.02 14:22:46 +0530

District Munsif cum Judicial Magistrate,
Shenkottai

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**...**

**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**

**CC No. 367/2016**

Deposition of the witness for Prosecution **PW** 2
Name : **சாலமோன்**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (02.02.2026)

A1 to A6 present

<u>முதல் விசாரணை</u>

நான் முத்துமாலைபுரத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாய தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. எதிரிகளை தெரியும். எங்களுக்கும், மகேந்திரனுக்கும் இடப்பிரச்சனை சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது. 08.05.2016 ம் தேதி காலை 09.00 மணிக்கு நானும், எனது மனைவியும் எங்கள் வீட்டில் வைக்கோல் படப்பில் வைக்கோல் உருவிக்கொண்டிருந்தபோது எதிரிகள் அனைவரும் தென்னை ஓலையை கிழித்தார்கள் நாங்கள் எதிரிகளிடம் கேட்டபோது எதிரிகள் எனது மனைவியை பார்த்து அசிங்கமாக பேசினார்கள். சுற்றுக்கல்லை எல்லாம் பிடுங்கி எறிந்தார்கள். எதிரி மகேந்திரன் மண்வெட்டி வைத்திருந்தார். அதை தங்கமாரியப்பன் பிடுங்கி மண்வெட்டி கனையால் எனது மனைவியின் நெற்றியில் அடித்தார். அசிங்கமாக பேசினார்கள். என்னை கண்டதும் எதிரிகள் ஓடிவிட்டார்கள். கற்களை பொறக்கி எறிந்தார்கள். 108 ஆம்புலன்ஸ் மூலமாக எனது மனைவியை தென்காசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்றேன். அங்கு 5 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள்  தரப்பில் குறுக்கு விசாரணை</u>

**இதே சம்பவத்தில் மகேந்திரன் கொடுத்த புகார் மனுவின் மீது எங்கள் இருவர் மீது சமூகம் நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு அது முடிந்துவிட்டது என்றால் சரிதான்.**

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2026.02.02 14:22:52 +0530

District Munsif cum Judicial Magistrate, Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 367/2016**

Deposition of the witness for Prosecution **PW** 1
Name : **ஆரோக்கியஜெயமணி**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (02.02.2026)

A1 to A6 present

<u>முதல் விசாரணை</u>

நான் முத்துமாலைபுரத்தில் குடியிருந்து வருகிறேன். பீடி சுற்றும் தொழில் செய்து வருகிறேன். எங்களுக்கும், மகேந்திரனுக்கும் இடப்பிரச்சனை சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்துது. 08.05.2016 ம் தேதி காலை 09.00 மணிக்கு நானும், எனது கணவரும் எங்கள் வீட்டில் வைக்கோல் படப்பில் வைக்கோல் உருவிக்கொண்டிருந்தபோது எதிரிகள் அனைவரும் தென்னை ஓலையை கிழித்தார்கள் நாங்கள் எதிரிகளிடம் கேட்டபோது எதிரிகள் என்னை பார்த்து தேவடியா மகளே என்று அசிங்கமாக பேசி, மண்வெட்டியை பிடுங்களி மண்வெட்டி கனையால் இடது நெற்றியில் தோள்பட்டையிலும் அடித்தார்கள். எனது கணவரும், விஜயகுமாரும் சத்தம்போடவும் எதிரிகள் என்னை பார்த்து கொலைமிரட்டல் விடுத்து அசிங்கமாக பேசிவிட்டு சென்றுவிட்டார்கள். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் தென்காசி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். அங்கு வைத்து போலீசாரிடம் புகார் மனு கொடுத்தேன். நான் 5 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்படுகிறது.**

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2026.02.02 14:22:56 +0530

District Munsif cum Judicial Magistrate, Shenkottai